بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுமுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/09/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் கால கட்டம் குறித்தும் அதில் நடைபெற்ற போர்களைக் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் கால கட்டத்தில் டமாஸ்கஸ் பல மாதங்களாக முற்றுகையிடப்பட்டு வந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. இச்சம்பவம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கால கட்டத்தைச் சார்ந்ததாகும். ஆகவே இதன் விபரங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்! தற்போது டமாஸ்கஸ் வெற்றிக்குப் பிறகு நடந்த சம்பவங்களை எடுத்துரைப்பேன்.

டமாஸ்கஸ் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களை பி(க்)காஃ எனும் இடத்தை நோக்கி போருக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வெற்றி கொண்ட பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மெஸனோன் என்ற நீரூற்றை நோக்கி ஒரு படைப் பிரிவை முன்னால் அனுப்பி வைத்தார்கள். ரோமானியர்களின் ஒரு படைப்பிரிவு முஸ்லிம்களுக்குப் பின்னால் இருந்து தாக்குதல் தொடுத்தார்கள். அதன் காரணமாக பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் ஷஹீதாகிப் போனார்கள். அந்த ஷஹீதுகளின் காரணமாக அந்த நீரூற்றுக்கு அய்னுஷ் ஷுஹதா (ஷஹீதுகளின் நீரூற்று) என்று பெயர் ஏற்பட்டு விட்டது.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் யஸீது பின் அபூ ஸுஃப்யான் அவர்களை டமாஸ்கஸில் தனது பிரதிநிதியாக நியமித்தார்கள். அவர்கள் தேஹா பின் கலீஃபா அவர்களை பல்மைரா நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவ்வாறே, அபூ ஸுஹ்ரா குஷைரீ அவர்களை பஸ்னியா மற்றும் ஹவ்ரான் ஆகியவற்றை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அங்குள்ள மக்கள் சமாதானம் செய்து கொண்டார்கள். ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்கள், திணிக்கப்பட்ட அந்த போரின் காரணமாக ஜோர்டானின் தலைநகரான திபேரியு -ஐத் தவிர (மீதமுள்ள) அனைத்து நாட்டையும் கைப்பற்றினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பி(க்)காஃ - விலிருந்து வெற்றி பெற்று திரும்பினார்கள்.

ஹிஜ்ரி 14 இல் ஃபெஹ்ல் வெற்றி கொள்ளப்பட்டது. ஹெர்குலிஸ், ஹோம்ஸ் நகரில் இருந்து கொண்டு டமாஸ்கஸுக்கு படைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறான் என்று ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், டமாஸ்கஸ் என்பது சிரியாவின் கோட்டையும் அதன் மையப் பகுதியுமாகும். முதலில் அதை வெற்றி கொள்ளுங்கள். அத்துடன் ஃபெஹ்லை நோக்கியும் படைப்பிரிவை அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். ரோமானிய படைகள் முஸ்லிம்களின் படையெடுப்பைக் கண்ட போது தம்மைச் சுற்றுயுள்ள இடங்களில் நீரை திறந்து விட்டார்கள். அதன் காரணமாக அனைத்து வழிகளும் அடைபட்டு போயின. ஹெர்குலிஸின் உதவிப் படைகளும் டமாஸ்கஸுக்கு வர முடியவில்லை. இன்னொரு பக்கம் இவ்வாறான நிலைகளிலும் முஸ்லிம்கள் உறுதியோடு இருந்தார்கள். அதைக் கண்டு கிறிஸ்தவர்கள் சமாதானத்திற்கு உடன்பட்டு விட்டனர்.

ஆனால் ரோமானியர்களின் பிடிவாதத்தின் காரணமாகவும், ஆணவத்தின் காரணமாகவும் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் தூதுவராக சென்றிருந்தும் கூட, ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் நேரடியாகச் சென்று பேச்சு வார்த்தை நடத்திய பின்பும் கூட அவை பயனளிக்கவில்லை; போர் நடைபெறாமல் போகவில்லை. ரோமானிய படையின் எண்ணிக்கை 50 ஆயிரத்திலிருத்து ஒரு இலட்சம் வரை என்று வரலாற்றில் கூறப்படுகிறது. போர் ஆரம்பித்தபோது முஸ்லிம்களின் உறுதிப்பாட்டைக் கண்ட ரோமானிய தளபதிகள் திரும்பிச் செல்ல விரும்பினர். ஆனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் முழக்கத்தின் காரணமாக முஸ்லிம்கள் எந்த அளவு தாக்குதல் தொடுத்து விட்டார்கள் என்றால், ரோமானியர்கள் தோல்வியுற்றனர். உதவி கிடைத்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் கிறிஸ்தவர்கள் போரைத் தாமதப்படுத்தி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் ஆலோசனைக்கேற்ப ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் அடுத்த நாளும் போரைத் தொடர்ந்தார்கள். அடுத்த நாள் ஒரு மணி நேரம் கடும் போர் நடைபெற்றது. அதன் பிறகு ரோமானியர்களின் பாதம் தடுமாறி விட்டது. அவர்கள் தப்பி ஓடி விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப உள்ளூர் வாசிகளின் உயிர், பொருள், நிலம், வீடுகள், வணக்கஸ்தலங்கள் ஆகிய அனைத்தும் உள்ளூர் வாசிகளிடத்திலேயே இருக்கும்படி விடப்பட்டன. முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்காக மட்டும் ஓரிடத்தை எடுத்துக் கொண்டனர்.

(இதற்குப் பிறகு) பைஸாண் மற்றும் திபேரியு ஆகியவை வெற்றி கொள்ளப்பட்டன. ஜோர்டானின் பகுதிகளில் ரோமானியர்களின் தோல்வியைக் குறித்த செய்தி பரவியிருந்தது. ஷுரஹ்பீல் மற்றும் அவர்களின் தோழர்கள் பைஸானை நோக்கி முன்னேறி வருவது மக்களுக்கு தெரிய வந்த போது அவர்கள் கோட்டையை மூடி உள்ளே இருந்து விட்டார்கள். சில நாட்கள் முற்றுகை நடை பெற்றது. பிறகு, சாதாரண மோதலுக்குப் பிறகு பைஸாண் வாசிகளுடன் சமாதானம் ஏற்பட்டு விட்டது. அவ்வாறே திபேரியு வாசிகளும் சமாதானத்திற்கு முன் வந்தனர். ஆகவே அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டில் ஹோம்ஸ் நகரம் வெற்றி கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களும் ஹோம்ஸ் நகரை முற்றுகையிட்ட போது அது கடும் குளிர் காலமாக இருந்தது. முஸ்லிம் படைகளிடம் குளிரை எதிர்கொள்ள எவ்வித ஏற்பாடும் இருக்கவில்லை. ஆகவே முஸ்லிம்கள் திறந்த மைதானத்தில் நீண்ட நேரம் போரிட முடியாது என ரோமானியர்கள் உறுதி கொண்டிருந்தனர். ஹோம்ஸ் நகர மக்களின் உதவிக்காக ஹெர்குலிஸ் ஒரு படையை அனுப்பியிருந்தான். ஆனால் ஈராக்கில் யுத்தம் செய்வதற்காக சென்றிருந்த ஹஸ்ரத் ஸஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அந்த படையை அங்கேயே தடுத்து நிறுத்தி விட்டார்கள். ஹோம்ஸ் நகர மக்களிடம் உதவிக்கான வாக்குறுதி கொடுத்து விட்டு ஹெர்குலிஸ் ருஹாஃ எனும் இடத்திற்கு சென்று விட்டான். ஹோம்ஸ் நகர மக்கள் முஸ்லிம்களின் உறுதிப்பாட்டைக் கண்டு சமாதானத்திற்கு உடன்பட்டனர். ஆகவே கப்பம், வரி ஆகியவை செலுத்த வேண்டும் என சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது.

மர்ஜுர் ரூம் -இன் சம்பவம் இவ்வருடத்தில்தான் நிகழ்ந்தது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்களும் ஸுல் கிலாஃ எனும் இடத்தில் முகாமிட்டிருப்பதாக ஹெர்குலிஸுக்கு தகவல் கிடைத்தது. ஆகவே அவன், எதிர்ப்பதற்காக தூஸரா என்பவனை அனுப்பி வைத்தான். இவர்கள் மர்ஜுர் ரூம் சென்றடைந்த போது ஷன்ஸ் ரூமியும் அங்கு வந்தடைந்தான். ஓர் இரவில் தூஸரா தன் இடத்தை காலி செய்துவிட்டு அங்கிருந்து சென்ற போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனை பின் தொடந்து சென்றார்கள். இன்னொரு புறம் யஸீது பின் அபூ ஸுஃப்யான் அவர்களுக்கு தூஸராவின் செயல்பாடு குறித்து தெரிய வந்தபோது அவர்கள் முன் பக்கம் இருந்து அவனை தடுத்து விட்டார்கள். இவ்வாறு இரு புறங்களில் இருந்தும் முஸ்லிம்கள் தூஸராவின் படையை சுற்றி வளைத்தார்கள். இவ்வாறு (எதிரிகள்) கொன்று குவிக்கப்பட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் மர்ஜுர் ரூம் -இல் ஷன்ஸை எதிர்கொண்டு வெற்றி பெற்றார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள்

ஹாமா, ஷேஸர் மற்றும் ஸலமியா ஆகிய இடங்களை வெற்றி கொண்டார்கள். அதன் பிறகு சிரியாவின் கடலோர நகரமான லடாகியாவை நோக்கி முன்னேறினார்கள். ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டில் லடாகியா வெற்றி கொள்ளப்பட்டது. போர் உத்திகளின் அடிப்படையில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் குகை வடிவமைப்பிலான அகழ்களைத் தோண்டச் செய்தார்கள். காலைப் பொழுதானதும் முற்றுகையை விலக்கிக் கொண்டார்கள். முற்றுகை முடிவுக்கு வந்ததைக் கண்டு நகர வாசிகள் கதவுகளைத் திறந்தனர். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் இரவோடு இரவாக தம் படையுடன் திரும்ப வந்து அந்த (பதுங்கு) குழிகளில் ஒளிந்து கொண்டார்கள். காலையில் நகரத்தின் கதவுகள் திறக்கப்பட்டதும் முஸ்லிம்கள் தாக்குதல் தொடுத்தனர்; நகரம் வெற்றி கொள்ளப்பட்டது.

ஹிஜ்ரி 15 இல் கின்னஸ்ரீன் வெற்றி கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை கின்னஸ்ரீனுக்கு அனுப்பி வைத்தார்கள். வழியில் ஹாஸிர் எனும் இடத்தில் மின்னாஸ் என்பவனின் தலைமையில் ரோமானியர்கள் எதிர் கொண்டு தோல்வியுற்றனர். அப்பகுதியைச் சார்ந்தவர்கள், வலுக்கட்டாயமாக தாங்கள் போரில் இணைக்கப்பட்டதாகக் கூறி தங்களை மன்னித்து விடும் படி கோரிக்கை வைத்தனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அம்மக்கள் கூறிய காரணத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சில ரோமானியர்கள் அங்கிருந்து ஓடி கோட்டையை மூடி கின்னஸ்ரீனுக்குள் இருந்து கொண்டனர். அங்கு சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் தப்பிக்க வழியின்றி சமாதானத்திற்கு கோரிக்கை வைத்தனர். ஆனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அம்மக்கள் கட்டளைக்குக் கட்டுப்பட மறுத்ததற்கான தண்டனையைக் கொடுக்க தீர்மானித்து விட்டார்கள். கின்னஸ்ரீன் வாசிகள் செல்வத்தையும், பொருட்களையும், மனைவி மக்களையும் விட்டு விட்டு அந்தகியாவு (நகரு) க்கு ஓடி விட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், அங்கு சென்றடைந்த போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தீர்மானம், நீதியுடன் இருப்பதாக (அறிந்து கொண்டு) அறிவித்தார்கள். ஆயினும் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கருணை காட்டியவாறு நகரவாசிகளுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். அதைக் கண்டு அந்தாகியா ஓடிச் சென்றவர்களும் வரி கொடுப்பதாக ஒப்புக் கொண்டு திரும்பி வந்தனர்.

ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் கிஸார்யா (எனும் நகரம்) வெற்றி கொள்ளப்பட்டது. அல் ஃபாரூக்கில் எழுதப்பட்டுள்ளதாவது: கிஸார்யாவின் மீது ஹிஜ்ரி 13 இல் அம்ர் பின் ஆஸ் அவர்கள் படையெடுத்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யஸீது பின் அபூ ஸுஃப்யான் அவர்களிடம் படையெடுப்பு செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அவர்கள் 17 ஆயிரம் எண்ணிக்கையைக் கொண்ட படையுடன் முற்றுகையிட்டார்கள். ஆனால் ஹிஜ்ரி 18 இல் யஸீது பின் அபூ ஸுஃப்யான் அவர்கள் நோய் வாய்ப்பட்டதன் காரணமாக அமீர் முஆவியா அவர்களை தன்னுடைய பிரதிநிதியாக நியமித்து விட்டு டமாஸ்கஸ் சென்று விட்டார்கள். டமாஸ்கஸில் அவர்களின் மரணம் சம்பவித்தது. ஹஸ்ரத் அமீர் முஆவியா (ரலி) அவர்கள் முற்றுகையை தொடரச் செய்தார்கள். அந்தப் போரில், பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட சஹாபியான ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) முஸ்லிம்களிடத்தில் வேதனை மிகு சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். "முஸ்லிம்களே! நீங்கள் தாக்குதல் தொடுத்து ரோமானியர்களை (களத்திலிருந்து) ஏன் அகற்ற முடியவில்லை என்றால், உங்களில் எவரேனும் ஒருவர் பயந்து விட்டார் அல்லது அவர் கலப்பற்றவராக இல்லை" என்று கூறினார்கள். பிறகு அவர்கள், உண்மை உள்ளத்துடன் ஷஹாதத்தை நாடுமாறு வலியுறுத்தினார்கள். இறுதியில் ஒரு நாள் ரோமானியர்கள் போரிடுவதற்காக வெளியில் வந்தனர்; கடும் தோல்வியுற்றனர். அந்நாளில் 80 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் வரையிலான ரோமானிய படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் கால கட்டத்தைப் பற்றிய குறிப்பு இனிமேலும் தொடரும் என்று கூறியவாறு, ஹுஸூர் அவர்கள் பின் வரும் மர்ஹூம்களின் நற்குறிப்பையும், ஜனாஸா ஃகாயிப் தொழுகையையும் தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

**1.** கேரளாவின் முன்னாள் முபல்லிக் ஆன மதிப்பிற்குரிய மௌலவி **K.** முஹம்மது அலவி சாஹிப் அவர்களின் துணைவியார், மதிப்பிற்குரிய கதீஜா சாஹிபா அவர்கள் கடந்த நாட்களில் **80** வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இவர்களின் தந்தையார் முஹ்யுத்தீன் சாஹிப் அவர்கள் கேரளாவினுடைய ஆரம்பகால அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். மர்ஹூமா அவர்கள் மிகவும் சிறு வயதிலேயே அஹ்மதியத்தில் இணையும் நற்பேறு பெற்றார்கள். மிகவும் பொறுமைசாலியும், நன்றி செலுத்தக்கூடியவரும், தொழுகை நோன்புகளை கடைபிடிப்பவரும், மார்க்கவாதியும், ஏழைகளை பராமரிக்கக் கூடியவரும், விருந்தோம்பல் செய்யக்கூடியவரும், போதுமென்ற மனம் படைத்த பெண்மணியும் ஆவார்கள். மர்ஹூமாவின் கணவர் இயக்கத்தின் முபல்லிக் ஆக இருந்தார்கள். சுற்றுப்பயணத்தின் காரணமாக பல நாட்கள் வரை வெளியே இருப்பார்கள். ஆனால் மர்ஹூமா அவர்கள் எப்பொழுதும் நன்றி செலுத்தியவாறு இருப்பார்கள்; அவர்களுக்கு ஒருபோதும் வருத்தம் ஏற்பட்டது கிடையாது. மர்ஹூமா அவர்களுக்கு இரு மகன்களும், **5** மகள்களும் உள்ளார்கள். மர்ஹூமா அவர்கள் வஸிய்யத்தும் செய்துள்ளார்கள். மர்ஹூமா உடைய மூத்த மகன் **K.** மஹ்மூது சாஹிப் அவர்கள் இயக்கத்தின் முபல்லிக் ஆக இருந்தார்கள். அவர் **54** ஆம் வயதில் சிறுநீரகம் செயலிழந்து போனதன் காரணமாக மரணமடைந்து விட்டார்கள். மர்ஹூமா அவர்களின் இளைய மகனும் இயக்கத்தினுடைய முஅல்லிம் ஆவார்கள். **5** பெண் பிள்ளைகளும் முரப்பிகளுடனேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

**2.** கோட் ஃபத்ஹ் கான் - ஐச் சார்ந்த அ(ட்)டக் உடைய முன்னாள் மாவட்ட அமீரான மதிப்பிற்குரிய மலிக் சுல்தான் ரஷீத் கான் சாஹிப் அவர்கள், ஆகஸ்ட் **22, 23** க்கு இடைப்பட்ட இரவில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் அவர்கள் கிலாஃபத்தினுடைய விசுவாசியாகவும், தப்லீக் ஆர்வம் உள்ளவராகவும், இறை வணக்கமிக்கவராகவும், துஆ செய்து வருபவராகவும், பணிவை மேற்கொள்பவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும், ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் உதவி செய்யக் கூடியவராகவும், மிகவும் ஞானத்துடன் பேசக் கூடிய மனிதராகவும் இருந்தார்கள்.

**3.** இந்தோனேஷியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல் கய்யூம் சாஹிப் அவர்கள் ஆகஸ்டு **25** ஆம் தேதி **82** வயதில் மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மர்ஹூம் அவர்கள், இந்தியா - பாகிஸ்தான் அல்லாத (வெளிநாட்டைச் சார்ந்த) முதல் முபல்லிக் ஆன மவ்லானா அப்துல் வாஹித் ஸமாட்ரி சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். மர்ஹூம் அவர்கள் தம் நாட்டிற்காக பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். மர்ஹூம் அவர்கள், முரப்பிகளுக்கும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கும் மிகவும் கண்ணியம் கொடுத்து வருவார்கள். தம் கீழ் பணியாற்றுபவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளக் கூடியவர்கள் ஆவார்கள். அன்னாரிடத்தில் கருணையும், கொடைத் தன்மையும் மிகவும் மேலான தரத்தில் காணப்பட்டது. மர்ஹூம் அவர்கள் கிலாஃபத்துடன் ஆழிய தொடர்பு கொண்டவராகவும், தன்னடக்கத்தில் உயர்ந்தவராகவும், பொருள் தியாகத்தில் முன்னணியில் இருப்பவராகவும், மிகவும் கலப்பற்ற சான்றோராகவும் இருந்தார்கள்.

**4.** பெனினைச் சார்ந்த மதிப்பிற்குரிய தாவூது ரஸ்ஸாக்கீ யூனுஸ் சாஹிப் அவர்கள் ஆகஸ்டு **27**-ஆம் தேதி **74** ஆம் வயதில் மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் அவர்கள் பெனினினுடைய ஆரம்ப அஹ்மதிகளுள் ஒருவராக இருந்தார்கள். பெனினுடைய படித்த அஹ்மதிகளில் இவரும் ஒருவராக கணக்கிடப்படுகிறார்கள். மின்சாரம் மற்றும் நீர் வளத் துறையின் டைரக்டர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள். மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, கண்ணியம் மிகுந்த, தொழுகைகளை பேணக்கூடிய, தஹஜ்ஜுத் தொழக் கூடிய, ஒரு நல்ல, கலப்பற்ற மனிதராக இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் மீது அளவில்லா நேசம் கொண்டிருந்தார்கள். நாள் முழுவதும் மனிதாபிமான சேவையில் மூழ்கியிருப்பார்கள்.

*ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் மஃக்ஃபிரத்திற்காகவும், உயர் அந்தஸ்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**